# பாணந்துறை பிரதேச சபை
# கழுத்துறை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 21 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 மார்ச் 18 திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் பாணந்துறை பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் போது முறையான கணக்குப் பதிவேடுகள் பேணப்பட்டுள்ளன என்றும் இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பாணந்துறை பிரதேச சபையின், செயற்பாட்டு நிலவரத்தையும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விடயங்களின் நிதிப் பெறுபேறுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 ஆம் ஆண்டிலிருந்து நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்குகளிற்கிடையே ரூபா 18,453 ஆன வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களின் பெறுமதியான ரூபா 490,759 ஆனது மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது மூடப்பட்டிருந்த 2 வாசிகசாலையிலுள்ள ரூபா 95,632 ஆன நூலகப் புத்தகங்கள், கெசல்வத்த உபகாரியாலயத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அவைகள் அந் நூலகத்தின் கொள்வனவாகக் கருதி பதிவு வைக்கப்பட்டமையின் காரணமாக நூலகப் புத்தகங்களின் கணக்கு மீதி மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்காக வருமானப் பங்களிப்புக் கணக்கின் மீதிகள் அப் பெறுமானத்தினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) வருடத்தின் இறுதியில் பொதுக்களஞ்சியம் மற்றும் மின்சாரக் களஞ்சிய இருப்புக்களின் திரண்ட மீதிகள் முறையே ரூபா 2,462,182 மற்றும் ரூபா 981,639 தொகைகளாகக் கணக்குகளில் காண்பிக்கப்பட்ட போதிலும் அவைகளின் பௌதீக மீதிகளின் பெறுமதிகள் முறையே ரூபா 785,536 மற்றும் ரூபா 384,012 ஆக இருந்தது.

(உ) 2008 மே தொடக்கம் 2010 திசெம்பர் வரை வீதி விளக்குகள் பொருத்தியதற்காக களுத்துறை இலங்கை மின்சாரக் (தனியார்) கம்பனிக்குச் செலுத்த வேண்டிய ரூபா 14,061,213 தொகைக்காக கணக்குகளில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) வாத்துவ தகனக் கூடத்தை நிர்மாணிப்பதற்காக 2007 நவம்பர் தொடக்கம் 2010 திசெம்பர் வரை செய்யப்பட்ட செலவு ரூபா 12,934,382 ஆக இருந்த போதிலும் ரூபா 1,450,000 தொகை மாத்திரம் மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(எ) வாத்துவ தகனக் கூடத்தில் அடுப்புடன் கூடிய சுடலைக் கூடத்தை நிர்மாணிப்பதற்காக 2010 ஏப்ரல் மாதத்தின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 538,576 தொகையான முற்பணம் முற்கொடுப்பனவுகளின் கீழ் கணக்கு வைக்கப்படுவதற்குப் பதிலாக உபகரணச் செலவினங்களின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் இறுதியில் வேலைக் கடன்கொடுத்தோராக செலுத்த வேண்டியிருந்த ரூபா 6,949,644 தொகைக்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டின் இறுதியில் 15 ஊழியர்களிடமிருந்தான பதவியினர் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 398,800 இனால் குறைவாகவும் இரண்டு ஊழியர்களிடமிருந்தான பதவியினர் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 12,000 இனால் அதிகரித்தும் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தன.

### 1.3.2 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

07 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 57,440,139 ஆக இருந்த போதிலும் அதற்குரிய பதிவேடுகள் மற்றும் உப காரியாலயங்களிலிருந்து சமர்ப்பிக்கப்பட்டிருந்த மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் அம்மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 53,197,552 ஆக இருந்தமையால் ரூபா 4,242,587 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 கொடுக்கவேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 24,002,409 ஆகும்.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

**தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் கூட்டுத்தொகை ரூபா 18,172,856 தொகை பெறுமதியான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |

| | |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| நிதிப்பிரமாணம் 396(ஈ) | இலங்கை வங்கி நடைமுறைக் கணக்கிற்குரிய 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் 06 மாதங்களை விஞ்சியிருந்த வழங்கப்பட்டிருந்த போதிலும் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படாத ரூபா 10,395 பெறுமதியான 09 காசோலைகள் சம்பந்தமாக தொடர்புடைய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) உள்ளூராட்சி ஆணையாளரின் 2004 யூலை 09 ஆந் திகதிய LG/05/2004 ஆம் இலக்க சுற்றுநிருபம் 2 ஆம் பந்தி | காசு, உபகரணம், களஞ்சியம் போன்ற ஒவ்வொரு சொத்து விடயத்திலும் பொறுப்பாக இருக்கின்ற மற்றும் வருமானங்களை சேகரிக்கின்ற எந்த உத்தியோகத்தர் களிடமிருந்தும் பிணைப்பணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. |
| (இ) மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 1997 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய தெ/முல/2/9/97 ஆம் இலக்க சுற்றுநிருபம் | தொடர்புடைய சுற்றுநிருபத்தின் அறிவுறுத்தல்களுக்கு முரணாக சீருடை உரித்துள்ள உத்தியோகத்தர்களுக்காக சீருடை வழங்குவதற்குப்பதிலாக அதற்காக பணமாக ரூபா 374,500 செலுத்தப்பட்டிருந்தது. |

### 1.3.6 தீர்க்கப்படாதிருந்த கணக்குகள்

(அ) 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு திர்க்கப்படாது நீண்ட காலத்திலிருந்து முன்கொண்டு வரப்படுகின்ற மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 24,002,409 ஆக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய பங்களிப்புப் பணத்திற்காக ரூபா 400,000 செலுத்தப்பட்டிருந்ததுடன் 2010 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் மேலும் செலுத்த வேண்டிய மீதி ரூபா 5,984,746 ஆக இருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 68,555,868 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 49,475,353 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

03 வருமான விடயங்கள் மற்றும் 05 செலவின விடயங்களில் மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மையான வருமானம் மற்றும் செலவினங்களுக்கிடையே 24% தொடக்கம் 352% வரையான வீச்சினுள் சாதகமான முரண்கள் அவதானிக்கப்பட்டதுடன் ஒரு வருமான விடயதில் 297% ஆன பாதகமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையானது மீளாய்வாண்டினுள் பாதீடானது சிறந்த கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதீப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டிற்காக மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பான சமர்ப்பித்திருந்த மதீப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றி தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான விடயம் | 2010 மதிப்பீடு | 2010 உள்ள வாறான | 2010 திசெம்பர் 31 இல் | 2009 மதிப்பீடு | 2009 உள்ள வாறான | 2009 திசெம்பர் 31 இல் |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா'000 | ரூபா '000 | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் வரி | 14,698 | 9,259 | 14,719 | 16,030 | 8,045 | 20,179 |
| (ii) | வாடகை | 2,149 | 919 | 3,339 | 3,220 | 1,998 | 2,361 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,586 | 1,320 | 950 | 1,749 | 1,266 | 1,445 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 3,172 | 2,857 | 1,833 | 14,385 | 6,749 | 1,530 |
| (v) | ஆரச மானியம், மாகாண சபை மானியம், மக நெகும | 7,040 | 3,522 | 3,518 | 13,277 | 4,646 | 8,631 |

### 2.3.2 நிலுவை வருமானத்தை அறவீடு செய்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவையான ஆதனவரி, வாடகை மற்றும் வியாபார அனுமதிப்பத்திர மீதிகள் ரூபா 27,136,711 ஆக இருந்ததுடன் அம் மீதிகளில் ரூபா 14,887,257 ஆனது கெசல்வத்த உபகாரியாலயத்திற்குரிய அதிகாரப் பிரதேசத்திலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ii) கெசல்வத்த உபகாரியாலயத்தின் அதிகாரப்பிரதேசத்திலுள்ள ஹேனமுல்ல பொதுச் சந்தையிலுள்ள திறந்த நிலையிலுள்ள 42 கடைகளில் 26 இற்கு 2005 ஆம் ஆண்டிலிருந்து கொண்டுவரப்படுகின்ற நிலுவை கடைவாடகை மீதி ரூபா 768,187 ஆக இருந்ததுடன் பல வருட காலமாக ரூபா 1,818,993 ஆன நிலுவை இறைச்சிக் கடை வாடகை மீதியொன்றும் கொண்டுவரப்படுகின்றது.

### 2.3.3 நீதிமன்றத் தண்டப் பணம்

பல்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் நீதவான் நீதிமன்றங்களினால் 2010 திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டு மாகாண வருமான ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ள ரூபா 31,366,679 தொகையான தண்டப்பணம் சபையினால் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்தது.

### 2.3.4 முத்திரைக் கட்டணம்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 53,748,350 தொகை முத்திரைக் கட்டணங்களாக கிடைக்க வேண்டியுள்ளது.

## 2.4 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான சபையின் பாதீட்டு மற்றும் உள்ளவாறான செலவு உரிய முரண்களுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவு விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| | பாதீட்டு | உள்ளவாறான | முரண் | பாதீட்டு | உள்ளவாறான | முரண் |
| **மீண்டுவரும் செலவுகள்** | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 |
| ஆளுக்குரிய வேதனம் | 55,485 | 57,221 | (1,736) | 49,396 | 53,654 | (4,258) |
| ஏனையவை | 54,404 | 24,901 | 29,503 | 49,433 | 21,041 | 28,392 |
| உப கூட்டுத் தொகை | 109,889 | 82,122 | 27,767 | 98,829 | 74,695 | 24,134 |
| மூலதன செலவுகள் | 37,275 | 40,961 | (3,686) | 40,875 | 60,350 | (19,475) |
| மொத்தக் கூட்டுத் தொகை | 147,164 | 123,083 | 24,081 | 139,704 | 135,045 | 4,659 |

## 2.5 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள்**

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பதவிகளின் தரம் | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| நிறைவேற்றுனர் | 01 | 01 |

| | | |
|---|---|---|
| இரண்டாம் தரத்தினர் | 49 | 41 |
| ஆரம்ப தரத்தினர் | 159 | 155 |
| ஏனையவை(அமைய, தற்காலிக) | -- | 11 |

## 2.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.6.1 கிடைக்க வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 114,111,764 ஆகக் காணப்பட்டது.

### 2.6.2 அறவிடப்பட வேண்டியிய பதவியணிக் கடன்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த பதவியணிக் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 18,123,578 ஆக இருந்தது.

## 2.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

### திட்டமிடல் குழு நடைபெறலும் கொடுப்பனவு செலுத்துதலும்

(i) 2004 திசெம்பர் 15 ஆந் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் (மே.மா) எல்ஜீடீ/05/04/எம் சே.தி ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 13 ஆம் பந்தியின் பிரகாரம் திட்டமிடல் குழுவின் அங்கத்தவர் எண்ணிக்கை 5 பேருக்கு வரையறுக்கப்பட்டிருந்தது. திட்டமிடல் குழுவிற்காக 05 பேர்கள் பெயர் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அங்கத்தவர்களுக்கு மேலதிகமாக 2010 ஆம் ஆண்டில் சபையின் உப தலைவர், செயற்பொறுப்பு உத்தியோகத்தர் மற்றும் அலுவலக உதவியாளர்களுக்காக ரூபா 188,700 கொடுப்பனவாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) திட்டமிடல் குழுவிற்காக வேலை அத்தியட்சகர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் போன்றவர்களில் ஒருவர் மாத்திரமே பங்குபற்ற முடியுமாயிருந்ததுடன் அபிவிருத்தி வேலைகளின் தன்மையின் பிரகாரம் அதற்கான விடயங்களைக் காண்பித்து நகர அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து பெறப்பட்ட அங்கீகாரத்தின் அடிப்படையில் தொழில்நுட்ப உத்தியோகத்தரின்

எண்ணிக்கையினை அதிகரிக்க முடியுமாக இருந்த போதிலும் அவ்வாறான அங்கீகாரமின்றி சபையின் திட்டமிடல் குழுவிற்காக வேலை அத்தியட்சகர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் போன்ற இருவரும் பங்குபற்றியிருந்தமையினால் 2010 ஆம் ஆண்டில் ஒருவருக்கு செலுத்தப்பட்ட ரூபா 142,500 தொகையானது ஒரு மேலதிகக் கொடுப்பனவாகும்.

## 2.8 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

(அ) சபைக்குச் சொந்தமான 842 வீதிகள் 1994 ஒக்தோபர் 01 ஆந் திகதி வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. அத்திகதியின் பின்னர் சபைக்கு கையளிக்கப்பட்ட அல்லது சபைக்குச் சொந்தமான வீதிகள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 21(2) இன் பிரகாரம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யப்படாதிருந்ததுடன் சபைக்குச் சொந்தமான வீதிகளை அதன் தன்மைக்கு ஏற்ப இனங்கண்டு பதிவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக சபையினால் பெறப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் சபையினால் இனங்காணப்பட்ட அனுமதியற்ற நிர்மாணங்களை அறிக்கையிடுவதற்கான ஏடொன்று பராமரிக்கப்பட்டிராமையினால் இனங்காணப்பட்ட மற்றும் அறிக்கையிடப்பட்ட அனுமதியற்ற நிர்மாணங்களும் அது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் எவ்வாறானது என கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது. 2010 ஆம் ஆண்டினுள் அதற்காக 02 கடிதக்கோவைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அனுமதியற்ற நிர்மாணங்களை இடைநிறுத்தும்படி அறிவித்து கடிதம் அனுப்பப்பட்டிருந்த போதிலும் அதன் பின்னர் அது தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2008 சனவரி 31 ஆந் திகதிய சபைத் தீர்மானத்தின் பிரகாரம் கெசெல்வத்த பிரதேசத்தில் குப்பை அகற்றும் செயற்பாடுகளை மேற்பார்வை செய்வற்காக ஓய்வுபெற்ற பொது சுகாதார பரிசோதகர் ஒருவர் 2008 மார்ச் 01 தொடக்கம் மாதாந்தம் ரூபா 10,000 கொடுப்பனவின் பிரகாரம் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டு 2010 திசெம்பர் வரை சேவையாற்றியதற்காக ரூபா 340,000 செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) இவ் உத்தியோகத்தரை நியமிப்பதற்காக உள்ளூராட்சி ஆணையாளரின் முறையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) இவ் உத்தியோகத்தரின் கடமைப்பட்டியல்களின் பிரகாரம் அந் நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்காக கெசெல்வத்த உபகாரியாலயத்திற்கு வேலைக் கட்டுப்பாட்டாளரும் பொது சுகாதார பரிசோதகரும் நியமிக்கப்பட்டிருந்தனர்.

(iii) 2010 யூலை மாதத்தின் போது சபையின் குப்பை அகற்றல்கள் கறதியான குப்பை அகற்றும் நிலையத்திற்கு கையளிக்கப்பட்ட பின்னரும் இவ் உத்தியோகத்தரின் சேவை பெறப்பட்டிருந்தது.

## 2.9 ஒப்பந்த நிருவாகம்

### கெசெல்வத்த நூலகக் கட்டிடத்தின் முதலாவது மாடியின் எஞ்சிய வேலைகளைப் பூர்த்தி செய்தல் (கட்டம் G)

மேற்கூறப்பட்ட நிர்மாணம் ரூபா 672,584 மொத்தத் கிரயத்திலான மதிப்பீட்டில் பூர்த்தி செய்வதற்காக பிரகத்தி கிராமிய சமுர்த்தி படையணியுடன் ஒரு ஒப்பந்தத்திற்கு உடன்பட்டிருந்ததுடன் நிர்மாணத்தின் கண்காணிப்பிற்காக பிரதேச பொறியியலாளருக்கு சாட்டப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) கட்டிட நிர்மாணிப்புக்கள் பல கட்டங்களின் கீழ் செய்யப்பட்டிருந்ததுடன் ஒவ்வொரு கட்டத்தின் கீழும் செய்யப்பட்ட செயற்பாடுகளுக்குரிய திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மேற்கூறப்பட்ட கட்டத்திற்காக சபையினால் ஒப்பந்தகாரருடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் நிபந்தனை இலக்கம் 03 இல் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி, இலக்கம் 04 இல் தாமதத்திற்காக அறவிடவேண்டிய தண்டப்பணத்தின் அளவு மற்றும் உடன்படிக்கைப் பத்திரம் கையொப்பமிடப்பட்ட திகதி என்பன குறிப்பிடப்பட்டிருக்காமையினால் உடன்படிக்கை பூரணமற்றதாகக் காணப்பட்டது.

(iii) நிர்மாணங்களுக்காக பிரதேச பொறியியலாளரினால் திகதியின்றி சிபார்சு செய்யப்பட்டிருந்த ரூபா 666,227 தொகையான இறுதிக் கொடுப்பனவு அறிக்கையில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 56,081 இற்குரிய கீழே குறிப்பிடப்படும் வேலைப் பகுதிகள் கணக்காய்வுத் திகதியான 2011 பெப்ரவரி 15 வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

| செலவின விடய இலக்கம் | விபரம் | அலகு எண்ணிக்கை | அளவு | தொகை |
|---|---|---|---|---|
| | | | | ரூபா |
| 6 | சிங்க் ஒன்று (Stainless Steel) பொருத்துதல் | விடயங்கள் | 01 | 5,150 |
| 7 | கழுவும் பேசன் பொருத்துதல் (Wash basin with red model) | விடயங்கள் | 04 | 32,760 |
| 10 | கதவுகளில் வர்ணம் பூசுதல் | சதுரஅடி | 6.56 | 18,171 |
| | | | | 56,081 |

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) ஒப்பந்த நிருவாகம்